**செய்தி வெளியீடு எண் : 500** **நாள்: 30.03.2022**

மாற்றுத்திறனாளிகளுக்கான சமவாய்ப்பு கொள்கை
3165 நிறுவனங்களில் (அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள்
மற்றும் தொழிற்சாலைகளில்) வெளியிடப்பட்டுள்ளது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், டிசம்பர் 2021 முதல் முதற்கட்டமாக தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுடன் நடத்திய சமவாய்ப்பு கொள்கை விழிப்புணர்வு கூட்டங்களின் மூலம் 3165 நிறுவனங்கள் சமவாய்ப்பு கொள்கையினை வெளியிட்டுள்ளன. மேலும் 1299 பணியிடங்கள் மாற்றுத்திறனாளிகள் பணிபுரிய உகந்த பணியிடங்களாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து இப்பணியிடங்களை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் நிரப்பிடும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது.

G.O.(Ms) No.02, Welfare of the Differently Abled Persons (DAP 3.1 ) Department, Dated 07.07.2021ன்படி, பொதுத்துறை மற்றும் தனியார் துறைகளில் மாற்றுத்திறனாளிகள் பணிபுரிய உகந்த பணியிடங்களைக் கண்டறிதல், மாற்றுத்திறனாளிகள் பணிபுரியும் இடங்களில் தடைகளற்ற சூழ்நிலைகளை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு சம வாய்ப்பு வழங்குவதை உறுதி செய்வதே சமவாய்ப்பு கொள்கை ஆகும்.

மாற்றுத்திறனாளிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், வேலை வாய்ப்புகளில் அவர்களுக்கான சம வாய்ப்பினை உறுதிபடுத்துவதற்காகவும், மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையம் (Differently Abled Employment and Livelihood Center) – DELC என்ற அமைப்பின் மூலம் மாநில அளவிலும், 6 மண்டலங்களில் (சென்னை,கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி,திருவண்ணாமலை) மண்டல அளவிலும், DELC செயல்படுத்திட திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி முறையில், குறைந்த விலைப்புள்ளி அளித்த We Are Your Voice என்ற நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு அந்நிறுவனத்தின் ஆலோசனை பணியாளர்கள் (Consultancy Staffs) மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேலும், மாவட்ட அளவில் DELC மூலம் அந்தந்த மாவட்டத்தில் உள்ள பல்வேறு தொண்டு நிறுவனங்கள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள், மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்களுடன் இணைந்து வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தி வருகின்றனர். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தனியார் கம்பெனிகளை நேரில் பார்வையிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பினை கண்டறியும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். இக்குழுவானது தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகள்

நல உரிமைகள் சட்டம் 2016ன்படி பணியிடங்களில் சமவாய்ப்பு கொள்கையினை நடைமுறைப்படுத்தும் பணியினை மேற்கொள்ளும்.

சமவாய்ப்பு கொள்கை குறித்த விவரங்களை ஒவ்வொரு தனியார் நிறுவனமும் தங்களது இணைய தளம் மற்றும் தங்கள் அலுவலகத்தில் அனைவரும் பார்க்கும் வண்ணம் வெளியிடப்பட வேண்டும், இச்சமவாய்ப்பு கொள்கையில் மாற்றுத்திறனாளிகளால் செய்யக்கூடிய பணிகளாக கண்டறியப்பட்ட பணிகள் குறித்த விவரம், இப்பணியிடங்களை நிரப்பிடும் விதிமுறைகள், மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட தடைகளற்ற சூழ்நிலைகளை உருவாக்கக்கூடிய வசதிகள். மாற்றுத்திறனாளிகளுக்கென பிரத்யேகமாக நியமனம் செய்யப்பட்டுள்ள தொடர்பு அலுவலர் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 2021 முதல், தனியார் நிறுவனங்கள், கம்பெனிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு 14 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. தனியார் வேலை வாய்ப்பு முகாம்களில் DELCன் பங்கேற்புடன் 533 மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு கோரும் 1935 மாற்றுத்திறனாளிகளிடமிருந்து அவர்தம் விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் நம்ம வீடு வசந்த பவன், திருச்சியில் ITC நிறுவனம், சேலத்தில் சென்னை சில்க்ஸ், திருநெல்வேலியில் ஓட்டல் ஜானகிராம் மற்றும் கோயம்புத்தூரில் ரிலையன்ஸ் ஆகிய நிறுவனங்களில் நேர்காணல்கள் நடத்தப்பட்டு மாற்றுத்திறனாளிகள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதுபற்றி மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் திரு. ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலன்கள், உரிமைகள் மற்றும் அவர்களது முன்னேற்றத்தில் முன்னோடியாக விளங்கி வரும் தமிழகமானது இந்தியாவிலேயே முதன்முறையாக சமவாய்ப்பு கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கென இதுபோன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது என்றும் இப்பணிகளை துரிதப்படுத்திட மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் தனியார் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்று தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in